5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

33. சிறு தொழில் நிறுவனங்கள் தயாரித்து விற்பனை செய்த காகிதப் பைகள் மீது *10-1-1996* முதல் *30-1-1996* வரையிலான கால அளவிற்கு செலுத்தத்தக்க விற்பனை வரி, மேல் வரி, கூடுதல் வரி, கூடுதல் விற்பனை வரி மற்றும் அபராதத் தொகை ஆகியவையினை தள்ளுபடி செய்து வணிக வரிகள் (டி.2) துறையின் *8-9-2004* ஆம் நாளிட்ட *378* (டி) ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிக்கை. (*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959*) பிரிவு *53(5)*, *1971* ஆம் ஆண்டு விற்பனை வரி (மேல் வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *24/1971*) பிரிவு *7(3)* மற்றும் *1970* ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *14/1970*) பிரிவு *4(3)* ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

34. சென்னை-1-ல் உள்ள "அன்பகம்" ஏலாமையுற்றோர், ஆதரவற்றோர் மற்றும் கைவிடப்பட்டோர் மறுவாழ்வு மற்றும் கல்வி அறக்கட்டளைக்குச் சொந்தமான டி.என்.04 ஜே 0538 (ஆம்புலன்ஸ்) ஆம் பதிவு எண்ணைக் கொண்ட மோட்டார் வண்டியினை வாடகைக்கு விடப்படாமல், நற்செயலுக்கு அளிக்கப்படாமல் மேற்சொன்ன அறக்கட்டளையின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் ஐந்து ஆண்டு கால அளவிற்கு அவ்வறக்கட்டளை செலுத்த வேண்டிய வரியினை ஐம்பது சதவீதமாக குறைத்து உள் (போக்குவரத்து-1) துறையின் *6-11-2004* ஆம் நாளிட்ட *1196* (டி.1) ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (*1974* ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *13/1974* பிரிவு *25(2)*-ன்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

35. *2003-2004* ஆம் ஆண்டிற்கான பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் முப்பதாவது ஆண்டறிக்கை. (*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

36. *2003-2004* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் இருபத்தி ஒன்பதாவது ஆண்டறிக்கை. (*1956* ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

2005 மார்ச் 4]

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

33. 2005-2006 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 1 முதல் 54 வரையிலான விரிவான மானியக் கோரிக்கைகள் (53 புத்தகங்கள்) (கோரிக்கை எண் 50 தவிர)

34. 2005-2006 ஆம் ஆண்டின் வருவாய் குறித்த விரிவான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

35. 2005-2006 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை.

36. 2005-2006 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு (பகுதி-1)

37. 2005-2006 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பு (பகுதி-2)

38. 2005-2006 ஆம் ஆண்டிற்கான நிதிநிலைக் குறிப்பின் இணைப்புகள்.

39. 2005-2006 ஆம் ஆண்டுத் திட்டம் (திட்டம்-வரவு செலவுத் திட்ட இணைப்பு) 2005-2006 ஆம் ஆண்டு விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளின் துணை வெளியீடு.

40. 2005-2006 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்களின் பட்டியல். (பகுதி-2 திட்டங்கள்).

41. 2005-2006 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையின் இணைப்புகள்.

42. 2005-2006 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட விளக்க நூல். (தமிழ், ஆங்கிலம்)

43. 2005-2006 ஆம் ஆண்டு செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

44. 2005-2006 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்து நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. சி. பொன்னையன் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

45. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (எட்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

46. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (ஒன்பதாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).